கூ. அ. 146
2875
நூ. ம
2460

கதிரேசன்பேரில்
ஆனந்தகளிப்பு

255·34
கதிரே
SL/PR.

ஸ்வதி புத்தகசாலை
சட்டியார் தெரு. கொழும்பு

255.34 கதி
54/PR

உ

கடவுள் துணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு

2460

T. R. பாலகிருஷ்ண முதலியார்

கலைமகள் விலாசம் பிரஸ்,

திருவொற்றியூர் சென்னை.

இதன் விலை] 1947 [அணா 12

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ்,
20, பெருமாள்கோவில் தோட்டத்தெரு,
ஜி. டி. சென்னை.

Q. H. M. S. 333   C. 1000   30-3-47

உ

கடவுள் துணை

கதிரேசன்பேரில்
ஆனந்தக்களிப்பு

காப்பு

குரு விருத்தம்

வெத்தி மாமயில் வேலவர் மீதினிற்
சித்தி யானந்தச் சிந்து புகழ்ந்திட
சத்தி வாலை யருள்திரு மாமத
அத்தி மாமுக னெங்கரன் காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா னாதந்த னானா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலென் றாளும்
பார்புகழ வேதுதி சிறக்க-எங்கள்
பாரமதை யானைமுகன் றன்னருள் பெருக்க
தானந்த நடனமயி லேலுஞ் சுவாமி
சரஹண பவானந்தன் மீதிலருள் சேரும்
ஆனந்தக் களிப்பிதனைப் பாட-கைலை
யாளிமல ரடிபைநா னனுதினந் தேட
சதுர்முகன் தேவிநயந் தாவே-யிந்தத்
தாரணியி லுகந்தகவி வாணர்ஜெயம் பெறவே
கதிர்காம மானகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணரரு ளால்சொன்ன ஆனந்தக் களிப்பாம்
திசைமெத்த புகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகு வியாபார தர்மமது வாழும்
வசியகுல நகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள் கதிரேசன் சந்நிதியில் தானே

சொன்னகவி தன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள் வாராம லென்னையுமே காத்த
நன்னய மிகுந்த தெய்வானை-யம்மன்
நற்கமல வடியிணையை நான் துதிப்பேனே
அருமறைகள் புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென் கவிதனக் கருள்தரவும் வேணும்
குறுமுனியைப் பணிந்துகவி கூற-அதற்கு
குறைகளொன்றும் வாராமல் சபையிலரங் கேற்ற
சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்ப சயனஞ்செய்த திருப்புல் லாணியிலே
நாதனருள் கங்கைகுல சீலன்-தங்கப்
ராமசாமி சொன்ன கவிக்குகந்த வேலன்
எச்சரிக்கை யென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங் காவடிகள் நின்று விளையாட
பச்சைமயி லேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத் தென்கலி யகற்றும் வடிவேலன்
தென்கதிர் மானகர் விளங்க-வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியே முழங்க
அன்பான சந்நிதி யிலங்க-கதிரை
ஆறுமுக வேலருட மாபதி துலங்க
முன்னாலே கோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால் வகுப்பும்
அன்னமெனும் தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந் தடித்துவிளை யாடிடுங் கூடம்
மூதண்ட யோகபதி யேறும்-கதிரை
முத்துலிங்க சுவாமியுட சந்நிதியைப் பாரும்
நாதமொடு கீதமு முழங்க-வசிய
நகரத்தார் கட்டிவைத்த சத்திரம் விளங்க
காணிக்கை கொண்டு வெகுகோடி-ஜனங்கள்
கதிரேசன் சந்நிதிக்கு வருவார்கள் தேடி
மாணிக்க கெங்கை நீராட-இங்கே
மாதவரும் மனிதர்களும் வந்துநிதங் கூட
பொன்னலங் காரநகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்ற நவரத்ன மேவிளையுந் தேசம்
சொர்னமிகு கதிரைவள மெத்த-தோழி
சொல்லுகிறேன் நாட்டுவளம் வானுல குதித்த

இந்திரனுட யேவலதி னாலே-வந்த
ஏழுமேகமு மொன்று கூடியே மேலே
சந்திரனென வாகவுமே வோங்கி-சத்த
சாகர மதில்தாவி தண்ணீரை வாங்கி
மாலென விசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியே கெர்ச்சித்து மின்னலு மடர்ந்து
நாலுதிசை நாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமி யெங்குமழை மாரிகள் பொழிந்து
ஏரிகுளம் வாவிகள் நிறைந்து வயல்க
ளெங்கெங்கு மேகன்னல் சென்னலும் வளர்ந்து
வீரிய மிகுந்தமு தத்தின்-நல்ல
வெண்கமுகு சோலைமலை மேலெங்குந் தோண
தனியே பழுத்துதிரு வாவும்-அதனில்
தாவியொரு கொம்போடே கொக்குகளுமேவும்
இனியமலர் வாசனைகள் தேடும்-விறுவிறென்
றிருபத்து நாலுகால் வண்டினங் கூடும்
நாகமது நாகமதி லேறும்-துய்ய
நாகமே புனைந்தசில மாதரையும் பாரும்
நாகமல ரசோகுமலர் முல்லை-யிந்த
நாட்டினிலே கலைபகடுக் கொருகொம்பு மில்லை
முல்லையிரு வாட்சிக ளெடுத்து-அந்த
முல்லையிலே யிதழில்லா மடவார் தொடுத்து
வல்லவினை தீரவெனத் தேடி-மாது
வள்ளி தெய்வானைக் கிடுவார்கள் கோடி
சதுர்மறையும் புகழ்தேவ ரிங்கே-வந்து
தான்வாசஞ் செய்கதிரை மாணிக்க கெங்கை
இதிலே நீராடுவது சித்தி-ஜென்மம்
ஈடேறுஞ் சாயுச்சிய பதவியிலே முத்தி
கோலமா மலையழகைப் பாரும்-கதிரை
குமரேச னருளாலே வல்வினைகள் தீரும்
மூலகண பதிக்கிளைய வாகன்-கதிரை
முத்துலிங் கேசருக் கருள்செய்த யோகன்
மாமேவும் புவிபுகழுந் தேட்டான்-கதிரை
மகிமைகளைச் சேடனு ளளவிட மாட்டான்
பூமேவுங் குழல்வள்ளி நேயன்-சுவாமி
புண்ணியன் தேவருக்கும் மனிதருக்கும் நாயன்

பச்சைமால் தனக்குமரு கோனே-சுவாமி
பழனிமலை மிதினிலே மேவுமுரு கோனே
வச்சிரா யுதன்தம்பி மருகா-உந்தன்
மலரடி யெனக்குநிதத் தரவேணு முருகா
நவவீரர் துணையான குகனே-நம்பி
நாராயணன் றங்கை யபிராமி மகனே
நவமணி யணிந்த வொளிமூவா-நின்று
நடனமிடு மயிலேறி யெனவந்து காவா
கனககுண் டலமிட்ட நீதா-சுவாமி
கார்த்திகே யாலட்சம் படைவீரர் தானே
தனமேரு பாக்கியமருள் வேலா-எங்கும்
சர்வபரி பூரணா னந்தசிவ பாலா
ஓராறு டங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யார மாகமயில் மீதுலவு தூயன்
ஈராறு பன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்கு மேதுதி மிகுந்த மெய்யாண்டி
ஆண்டிபொன் னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலை யாண்டி சிலையாண்டி யிவனாண்டி
ஆண்டிமக னாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகான சாமிமலை திருப்பரங்குன் றாண்டி
சிக்கல்புர வச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூ ரெட்டிகுடி குன்றைக்குடி யாண்டி
மிக்கதிரு வேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர் வேல்முருக னாறுமுகத் தாண்டி
சோலைமலை கழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலை விராலிமலை சென்னிமலை யாண்டி
வாலையருள் பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க் கேயெந்த நாளுமனு கூலா
விடவரவு படமும்விசை கெடவும்-படியே
வடவரைகள் கிடுகிடென கெஜமுமசை படவும்
கடல்சுவர கதிர்மதி கலங்க-தாவி
கனவேக மாகவரு மயில்மீ திலங்க
மேலாகி விளையாடு மெய்யா-வெற்றி
காலா யுதத்தையு மெடுத்த முருகையா
சாலோக சாமீப மென்னும்-சுவாமி
சாரூப சாயுச்சிய பதவியிலே மூன்னும்

ஆகவேநின்றபர நாதா-என்னை
ஆதரித் தாளவர வேணுங்குரு நாதா
தாகமா யிருக்குதுனைக் காண-வந்த
சுவாமி வருவாயெனது கண்ணெதிரே தோண
அரகரா வேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுக மாய்வந்த வடிவே நமாவோம்
அரகரா முருகா நமாவோம்-வாலை
யம்பிகை பராசத்தி மைந்தா நமாவோம்
அரகரா குகனே நமாவோம்-சுவாமி
அன்பருக் கன்பான பொருளே நமாவோம்
அரகரா தேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவ னத்திலும் நிறைந்தாய் நமாவோம்
மயிலேறு மொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந் தமிழ்முனிவன் குருவே நமாவோம்
மயிலேறும் கந்தா நமாவோம்-வட்ட
வடவாவில் மேவுமால் மருகா நமாவோம்
மயிலேறும் நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும் பரமனுட குருவே நமாவோம்
மயிலேறு கின்றாய் நமாவோம்-தங்க
வடிவான வேலது வுகந்தாய் நமாவோம்
திரிபுர பவாவா நமாவோம்-வாலை
சேயனே திகழொளி பவாவா நமாவோம்
பரிபுரி பவாவா நமாவோம்-வள்ளி
பாகனே பவனொழி பவாவா நமாவோம்
சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியே சயலொழி பவாவா நமாவோம்
தருமதுரை யே நீரு மென்னை-நல்ல
தருணமிது காணிந்த வேளையிலே யென்னை
காவாவுன் னீரடிகள் தன்னை-நான்
கண்டெனது கலிதீர வந்துமென் முன்னை
வாவென்று சொல்லமன மிலையோ-உனக்கு
வள்ளிதெய்வானைவிடை தந்தனுப்ப விலையோ
தஞ்சமென் றேனே யுனக்கு-எனது
சஞ்சல மெனுங்கலியைத் தீர்ப்பா யெனக்கு
அஞ்சறிவு மானதா யகனே-சுவாமி
அகிலாண்ட கோடி பிர்ம்மாண்ட நாயகனே

உன்கிருபை தந்துமேகண் பாரும்-இந்த
உலகமுழு தாள்பவனே யென்கலியைத் தீரும்
அன்புபெரும் வானரராஜன் பேரா-சுவாமி
அடியனுன் னடியிணையைக் காண நீ ராரா
வாவாயென் றேவா நீ யென்றே-சுவாமி
வடிவேல வாவெனத் தொழுது நின்றே
எவன்தேடி னுலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடி னுலும் பாடட்டும்
நமக்கென்ன வென்றிருக்கி றீரோ-சுவாமி
ஞாயமோ நானுமுறை யிட்டதறி யீரோ
உமக்குமன திரங்காத தேது-எங்க
ளுத்தமி துரந்தரியின் பாலாயிப் போது
ஐயா நீ கிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்ட கோடிபூ மண்டலத்தின் மேலே
மெய்யான சரியையி லனேகர் அதற்கு
மேலான கிரியையி லிருப்பவ ரனேகர்
தவயோகக் காரர்வெகு வெள்ளம்-அங்கு
தங்கியே யிருப்பவர்க ளோமகா வெள்ளம்
அவர்களைப் போல்நான்பிறந்த திலேயோ-உனக்
காளாக வெனக்குவிதி வயனெழுதவிலேயோ
அன்னையவ ளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலே முன்னவர்கள் செய்துவந்த சதியோ
என்னகுறை யிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கு யாளாக வென்னையுமே சேர்த்து
ஆளாக்கி யாளலாகாதோ-எந்த
னகந்தனிலே நீயிருந்து வாழலா காதோ
பாழான மனங்குவியு திலேயோ-என்ன்
பாவமோ வதிலிருக்கும் பிசகு தெரியலையே
வஞ்சக மில்லாமலே கண்பாரும்-முடிவில்
மறலியுட தூதரென்னை வருத்தாமல் காரும்
அஞ்சுதலை யாரருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யாய்வேத னிருந்ததுவுஞ் சரியே
ஆறுதனைக் கண்டண்ட ரய்யா-பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டாரே மெய்யா
ஆறுபடை வீட்டுக்கதி காரா-வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும் வீரா

சத்தி யுமை பாலகனே-உந்தன்
தாசனுக்கு தாசனெனைக் காப்பதற் கேமி
சுத்த பரிபூரண வுன்னை-ஓதி
துதிக்குமடி யார்க்குமடி யாகவரு ளென்னை
பொய்யாத வாழ்வருள வேலா-கந்தை
ஐயாவே யெனையாளுந் தேவாதி தேவா
ஒய்யார மானமுரு கோனே-வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவே னனே
உரமான வசுரரிட ராலே-தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலை மேலே
அரனசுரர் மேல்கோப மாகி-கைலை
யாளிவிழி தனிலே யொருபொறி சிதறியே
சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து
உருவாகி மலர்மீதி லானர்-எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள் மகனர்
அப்பவே சென்னியோ ராரும்-மெத்த
வழகான செந்திரு புயங்களீ ராருய்
உற்பவ மானபனி ரண்டு-விழிகள்
ஒளிவாகி யோரு பெண்கள்பா லுண்டு
அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
னரனுக்கு வுபதேசஞ் சொல்லியே கொடுத்தான்
கயமுகா சூரன்முத லோரை-கந்தன்
கைவேலி னலவர்கள் கருவறுந் தாரே
தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன்
தென்கதிரை மாநக ரிலங்கும்-சுவாமி
சிங்கார மாயுனது வருள்கிருபை பொங்கும்
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக் கிணையான சித்ரமயில் வேலன்
சத்திவே லாயுதமு முடையான்-பூண்ட [ன்
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையா
கடகமெனு மானதிங் களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவரு கையிலே
கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகே தயங்க

செங்காவிப் பட்டாலே சோடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள் பலகோடி
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர் கோடி
சேர்க்கையாய் மூரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறை யோத
பார்க்கவெகு மாமுனிவர் வரவே கவிகள்
பாடியே அரகரா வென்றுபுகழ்பெறவே
ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகான வாலாத்தி தீபமே துலங்க
மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனி வந்தார்
மதகரியோ வருகிறதைப் பாரும் சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும் பாரும்
கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ் சாத்தி
கரியலவு வனமூடு சென்று-சொல்லக்
கதிர்காமம் போய்வந்து நீராறுப் பென்று
சரியான பௌரணேயை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன் கூடி
வாரிபோல் பெருகி நீரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்து நீராடி
கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியே யுகந்து
புள்ளிமயில் வேலர் விரைவாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்கு ளேக
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு
சித்ரமணி மலரணையில் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திவர்கள் மேவி
கொத்துமுத்து நத்துவளை திருத்தி-இவர்கள்
குளிர்ந்த கமகமெனமலர் வாசனைகள் பொருத்தி
இங்கிர்த மணுளதண நீதா-யெனக்கு
இனியசுக போகமத லீலா வினோதா
எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசு வாசா

அத்தைபெற்ற மூத்தேயெங் கோனே-யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனே யம்மானே
முத்திரையிட் டிலங்குகொங்கை யாளே-வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர் கையாலே
கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமத போஜன்
சலதரத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுத லாளே
எந்தனுக் கிசைந்தமனே யாளே-வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக்குகந்ததுணையாளே
வந்து வெகுநேர மாகுதடி-யெந்தன்
மாதுதெய் வானையெனைத் தேடிடுவாள் நாடி
போய்வாரேன் விடைதாடி யென்ன-வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமி நீர்சொன்ன
வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான் [பேச்சு
போய்வாரேனென்று சொன்ன வகைதானென்ன
அங்கேபோய் செலுத்துமதி காரம்-எந்த
வரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோ வீரம்
இங்கிரண்டு நாளிந்து போனல்-சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமுமக் கதனல்
என்மனையி லிருக்கையிலே யவளேன்-உம்மை
யேன் தேட வேண்டியது தானேன்
உண்மையெனக் கின்னதென்று தானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளி யென்மானே
இங்கேவந்து நானிருப்ப தாலே யென்னை
யெங்கேயோ வென்றுதெய் வானையொருக் காலே
மங்கையருந் தேடுவா ளின்று-யெனக்கு
வள்ளி நீ விடைதாடி போய்வாறே னென்று
இவர்கூற வள்ளி மின்னுளே-சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம் நாளை
அவசர முமக்கென்ன வங்கே-சுவாமி
ஆனலு நீர்போக சம்மதியே னிங்கே
கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக்கஞ்சி நான் பயப்படவு மாட்டேன்
தேடியிங்கே தெய்வானை வரட்டும்-என்றும்
செப்புவதும் ஒப்பினையும் வள்ளிகை நீட்டும்

பார்த்தே தடிவள்ளி மானே-சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லு வானே
ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கு நிகராவரோ பெண்கள் கோடி
சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலை சூட்டி
வந்தபடி யாலவ ளுனக்கு-முந்தி
வந்தவளு மானதால் நானுமவ ளுக்கு
அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலு மில்லறத்துக் கதுதானே யோக்கியம்
மடக்கொடி தெய்வானையிவ ணிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவா ளங்கே
போகவிடை தாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோப மூட்ட
மாகனக மேடையி லிலங்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளென விளங்கும்
தெய்வானை சொந்தமாய் போச்சோ நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோ லாச்சோ
கைமாயஞ் செய்தோமோ நாங்கள்-ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்திரோ வுங்கள்
சாதியா ரேசுவா ரோகாண்-நீருந்
தலைமறைய யென்மனைக்கு வருவானே யேன்காண்
ஆதியிலே யெனையு நினைத்து-வந்த
தறியாளோ தெய்வானை யும்மையு மழைத்து
கூட்டிவந்த நாரதரைக் கேளும்-வனத்தில்
குளத்தருகி லேமிகுந்த கரடிபுலி வாழும்
காட்டினி லுமக்குதவி செய்தார்-உங்களண்ணன் [வார்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச் சொல்
சிவதலங்கள் செயசபை முன்னாலே-வைத்து
தெய்வானை யெத்தாலி கட்டினதி னாலே
அவள்மாத்திரஞ் சொந்தக் கிளையோ-சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்க விலையோ
வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து
கள்ளிபோல் வீணிரை யாதே-பொல்லாக்
கசடான குறவருட சாதியொளி யாதே

இரண்டு சமு சாரமாகாது-யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியான தோது
வண்டர்குல மானேயுனை நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலா மோடி
நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
நினைவறிந்து வள்ளியவள் சிதறியெதிர் நின்று
வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போக வேணும்
என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி [டே
இடைதனிலே சேலையை யிருக்கியெதிர் கொண்
அன்புற நெருங்குவது கண்டார் வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறே னென்றார்
சொல்லுகிற சமாசார மென்ன-உபது
தொழிலைநான் நெடுகிலு மறிந்துமினி யென்ன
நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம்-உமது
ஞாயமதைதேவ சபையிலே சொல்லிகேழ்ப்போம்
தேவ சபையிலே சொல்லிப்பாரு-அவர்க்கு
தெரியுமடி நினைப் புனத்தில் நீயிருந்த சீரு
ஓவியமே என்னுறுதி கேட்க-யெழுதும் [பார்க்க
உடன்படிக்கை முடியுண்டோ கொண்டாடிப்
உடன்படிக்கை முறியெழுதி தாரேன்-வள்ளி
புனக்கேவல் செய்வதற்கு உன்பிறகே வாரேன்
கடக்கவெனைத் தள்ளாதே மானே-யென்று
கட்டிமுத்த மிட்டது கசப்பேறு வானே
தனியே வனத்தி லிருபேருங்-கூடுஞ்
சையோக வேளையிலே பார்த்தென்னை நீரும்
இனிய செந்தேனே கற்கண்டோ-உந்த
னிதமென்று சொன்னதுவு மில்லையோ வுண்டோ
முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ-யிப்போ
மூத்தகுடி யாளுமக்குச் சர்க்கரைபோ லாச்சோ
என்னை நீர் வசைசொல்வ தேனோ-சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவது மேனோ
தந்தையுங்கள் தேட்டை யெடுத்தாரே-யெங்கள்
சாதியார் வந்துநிதந் தின்றுகொடுத் தாரோ
எந்தனுற் குறைகளே துண்டோ-சுவாமி
இழுக்கெந்த சாதியிலு மில்லாம லுண்டோ

மங்களகல் யாணமதில் நல்லாள்-அந்த
மணவறையி லென்தகப்ப னிட்டநகை யல்லால்
உங்களிடம் வந்தநாட் கொண்டோ-யெனக்கு [டே ம
ருத்திராட்ச வடத்துக்கொரு நவமணியு முண்
மாதிவை யுரைக்க முத்தையன்-வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்வார் மெய்யன்
ஏதடி நீ பேச்சதிகங் கொண்டாய்-வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்ன கண்டாய்
குபேரன் மகள்போல பேசாதே-யொப்பன் [லாதே
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியே சொல்
சபையார்க ளென்னவறி யாரோ-யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவரு மறியாரோ
உடுத்திவந்த துணிக்கு வேறுண்டோ-களிம்பு
ஊறிய பித்தளை யோலைக்கு வேறுண்டோ
தொடுத்திருந்த கருமணி யோடே-என்னை
துடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடை
வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் யெண்ணெயிட் டறியாத தலையும்
புண்ணுக்கு போலிருக்கு மேலுக்-காட்டில் [லும்
புரண்டிசெடி முள்ளிழுத்து சுரண்டிட விட்டா
எப்போதுங் காய்கிழங்கை தின்று-நீயும் [னும்
இருந்தகெதி தெரியாதோ வரும்போதென் பின்
அப்பவே நானழைத்திடத் தந்து-நல்ல
வாபரண மானதையு மழகா யணிந்து
செம்பவள மாளிகை யமைத்து-உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல் நேமித்து
நம்பிநான் செய்ததை மறந்து-வள்ளி
நாயகமே பேசுவது மென்னடி யிகழ்ந்து
மாதே நீ பதராதே அடி-யெந்தன்
மன்முழுது மறியாமல் சொல்லாதே போடி
கோதையே யிதுவென்ன மூர்க்கம்-உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவரிட மார்க்கம்
சாராயங் கள்ளுகள் குடித்து-குறவர்
சந்துக்கு சந்திலே சண்டைகள் பிடித்து
பூராயம் தெரியாமற் கத்தி-கண்ட
பூனைகளை யெரவார முசலொன்று குத்தி

தின்பதுவு முண்டதிக மாக-குறவர்
சேரியிலே நீபழகி வந்ததவைபோக
செப்பவள வாயாலே யென்று-சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங் கொண்டு
விண்ணுணம் பேசுவது சீரோ-சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றது மாரோ
கண்ணப்ப னெச்சிலை திங்கலையோ-சிவனும்
கறிக்காகப் பாலகனைக் கொன்றது மிலையோ
புத்தியுமக் கில்லாதே போமோ-கெட்ட
புனக்குறவர் பெண்ணை நீர் சம்மதிக்க லாமோ
யெத்திசையும் புகழ்பெற்ற நாதா-வென்று
யிவள்சொல்லும் வசைகண்டு கூறுவார் தோதா
அடந்தேகுவார் குடும மிருந்தால்-குரவர்
அவர்தனக்கே செலவுக் கில்லாதிருந் தால்
கடன் வாங்குவார் சம்மதித்து-தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து
கொடுத்துவிட்ட பணத்துக் கீடாக வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன் வெகுவாக
அடுத்தவளை யனுதினமுங் கூடி-யிவர்கள்
ஐந்தாறு பிள்ளைகளைப் பெற்றபின் தேடி
பணங்கொடுத்துத் திருப்புகிற போது-பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள் மாது
குணமாக முன்னீடு வைத்த-பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதியிலே மெத்த
இதுபுதுமை யிவ்வுலகி லுண்டோ-வள்ளி
யேந்திழையே யிதைவிட லெச்சை வேறுண்டோ
கதிகொண்ட மயில்வாகனத்தார்-இந்தக்
கதைசொல் லவேவள்ளி யவளெதி ருரைத்தாள்
குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ்-சுவாமி
கும்பமுனியா லுங்கள் சேதிகொஞ்சந் தெரியும்
மறந்தீரோ நீரறிந்த திலையோ-யொப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்ட திலையோ
சிந்தை மகிழ்ந்தொரு பெண்ணைத்தூக்கி-உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந்ததுக்கு சாட்சி
நந்திகேசுவரர் சொல்லக் கேட்டேன்-சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான்சொல்ல மாட்டேன்

ஆட்டுக்கால தூதனை யெடுத்தார்-உங்க
எப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார்
கேட்டுப்பா ருமதுதாய் ஐயோ-ஒற்றை
மாட்டுக்காரனை வைத்திருந்ததுவும் பொய்யோ
கண்ணுயிரங் கொண்டநேத்தி-யெம்மான்
பெண்ணாசை கொண்டல்லோ வந்த வபகீர்த்தி
பெண்ணொருவர் கொடுக்காத தெதினால்-யொண்ணான்
பெருவயறு கொண்டுவழிக் கரையிலிருந் ததினால்
அண்ணனுமே மத்தளங் கொண்ட-சொந்த
அருமை மருமகனின்று கைத்தாளந் தட்ட
விண்ணவர்கள் கூடியே நகைக்க-வந்த
வேதியரும் மாதவருங் கண்டு பிர்மிக்க
தேவடியாள் போலுமது அன்னை-கூடுந்
தேவசபையிலே நின்று ஆடலையே முன்னை
பாவலருக் கருள்புரியுஞ் சீலா-யிதையும்
பார்த்தவர்கள் சிரியாரோ தங்கவடி வேலா
பத்மாசூரனுக்கு மிகப் பயந்து உங்கள்
பரமசிவன் ஓடலையோ காட்டுவழி நுழைந்து
கைப்பொருளு மில்லாமல் தேகி-யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவ யோகி
கும்பமுனிக் கருள்புரிந் தோரே-யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே
தென்பாக யென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக் கள்ளி
குதிகொண்ட வனக்குறவர் சாதி-வகையை
கூறறிந்து சொல்லுகிறேன் கேளுமவர் சேதி
சதிர்பெருகுந் திருவிழாக் கடையில்-ஜனங்கள்
சந்தடிக ளாகவே சயனிக்கு மிடையில்
கூசாமல் கூடவே படுத்து தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியே யெடுத்து
பேசாம லோடுவது கண்டு-குறத்தி
பெரியதனக் காரர்களு மேபிடித்துக்கொண்டு
வம்பிலே தலைமயிரைக் கட்டி-குறத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்று கிட்டி
செம்பாணி கொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையை யுரிந்து சினமாகவே நிறுத்தி

அடிதண்ட மாகவே யடிப்பார்-குறவர்
அப்பவு மெடுக்கவில்லை யென்றுமே துடிப்பார்
தடி யடிக்கு யசையாத சாதி-குறவர்
சங்கைகெட்டு நிற்பார்கள் தெரியுமவர் சேதி
என்றிவ ருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வா ளப்போது
தொண்டர்தொழு கின்றமயி லேறுஞ்-சுவாமி
சொல்லுவே னுங்கள்குல வளமைகளைப் பாரும்
அடையாளஞ் சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள் கூடிவரு மாயர்பாடி வாழும்
இடையருட வளவிலென் னாளும்-உறியி [ளும்
லிருந்தவெண்ணெய் திருடினதை யாரென்று கே
அன்றுடன சோதை யறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகின்ற கயிறால்வரிந்து
ஒன்றாக மாத ரொருபக்கங்-கூடி
உரலோடே கட்டி னதைச் சொன்னாலும்
கட்டுண்டதும் ரோஷ மிலையோ-பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்ட திலையோ
வெட்டிய சமர்க்களத்தி லேறும்-கிருஷ்ணன்
விஜயனுட குதிரைகளை மேய்க்கலையோ பாரும்
ஊத்துகிற கஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன் [த்தார்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கட்டியங்கே மேய்
கூத்ததிக முண்டின்னம் ரொம்ப-சொல்லக்
கூசுதே யென்மனமு மென்றிவளி யம்ப
கேட்டவடி வேலவர்கை நீட்டி-வள்ளி
கேளடி யுங்களுட வீடுமலை நாட்டில்
நீட்டியிரு கால்களை நிறுத்தி-அதனில்
நெட்டுமுட்டாகவளை கூட்டியே பொருத்தி
நத்திய கயிற்றால் வரிச்சு-மழைக்கு
நனையாமல் மூங்கிலிலை யால்மேய்ந்த குச்சு
சுற்றிவைத்த சுவரெல்லா மோட்டை-யசந்து
தூங்கவும் விடாதங்கு மூணுமூணுத்த மூட்டை
ஆடேறி மேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிட மில்லை
மூடாத வாசல்களைக் கண்டு-பார்த்து
மூடினா லுசாவொரு முகட்டொழுக்கு முண்டு

தேடாத பொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந் தெரியாமல் தோணாமல் தோணும்
கூடாது குழவீட்டை நம்ப-சற்றே
குந்தவைக்க முடியாது நசுநசுப்பு ரொம்ப
குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
குறவரிட பக்தியெல்லாங் கூறையிலே தூங்கும்
வரம்பேது மில்லை யென்னாளும்-யென்று
வடிவேலர் சொல்லவே வள்ளிமின்னாளும்
தமக்கென்று சிறு குடிசை கட்டி-குறவர்
தானிருப்பது வேவசை யில்லாத கெட்டி
உமக்கொரு தலத்தினிலும் நாடி-சுவாமி
ஒண்டயிட மில்லாமல் மலைக்குமலை யோடி
கையிலரைக் காசுமே யில்லாமல் வீதி
கட்டியே குடியிருக்க வகையு மறியாமல்
வெய்யலிலும் வேனலிலுங் காய்ந்து-சுவாமி
மெத்தவரு ஷித்தமழை பனியால் கனிந்து
இருப்பதைக் கண்டுமனம் வாடி-உமக்கு
யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங் கூடி
சிறக்கவே கோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணியாபரணம் விருதுகள் சமைத்து
வடிவேல வாவென்று யெண்ணி-உமக்கு
வரிசையிட்டு வைத்தார்கள் பிரதிஷ்டை பண்ணி
அடியவர்கள் புண்ணியமீ தையா-நீரும்
அழகான கோவில்க ளிலிருக்கிறது மெய்யா
தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
ஜெயமேள பேரிகையுங் கோவில்களு மிரவல்
ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
யிட்ட நவ ரத்னமணி யாபரண மிரவல்
இத்தனையு முமக்கிரவல் தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்கிறீ ரெண்ணாமல் வீணே
வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு [தம்
வேறேயொரு ஆஸ்திகளின் மேலென்ன சொந்
மச்சமுனி மறைபொருள்க ளாலும்-உங்கள்
வங்கிஷ வகுப்புகளைச் சொன்னாரே கேளுங்
மச்சானே மறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொரு மாமனே அளவளந்த தாதன்

ஆத்தாளோ பாலூருப் பறைச்சி-அவளுக் [ச்சி
கருமையுள்ள தயையனையும் வளர்த்தவளு மிடை
தாத்தாவோ மீன்காரக் குறவன்-உமக்கு
தளகர்த்த னவனும் நல்லகுல மறவன்
அரனா ரென்றுமை யீன்ற தய்யா-சங்க [யா
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள் மெய்
வரமுறைக ளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள் தெரியாயோ பலசாதிக் கூட்டம்
இதற்கு முன்னே நானறிந்தாலும்-உமக்கு
இசைவேனோ நீர்குட்டிக் கரணம் போட்டாலும்
அதற்கென்ன செய்யலா மய்யா-நாங்க
ளானாலுங் குறச்சாதி யென்பதும் பொய்யா
பண்டாரம் நானென்று கத்தி-யெந்தன்
பரணெதிரே வந்தீரே யதுவென்ன புத்தி
கொண்டுகுலம் பேசுவது பேச்சோ-சுவாமி [சோ
கொய்ததினை மாவுக்கெனை கெஞ்சினதும் போச்
பேருதெரி யாமலுரு மாறி-வந்து
பிசகுசெய்த மதகரியி னாலேமத மீறி
பாரமத யானை வராவிட்டால்-உமது
பாசாங்குக் குள்ளாக மாட்டே னில்லா விட்டால் [சி
வழகியிந் தாடிகுற வஞ்சி-யென்று
வனவேடன் போலேவந்து யென்னெதிரே கெஞ்
களையாகு தெனவந்து முட்டி-நீரும்
காரியங்கள் கொண்டபின் பேசுகிறீர் கெட்டி
வலியேநான் வந்தேனோ தொட்டு-நீரும்
வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென செட்டு
சலியாமல் நீருறுதி சொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகால மானாலு மென்ன
பொன்னடி துலங்கிய யென்மாமி-பெற்ற
புண்ணியனே யனுதினமு மகலாமல் சாமி
யென்னருகி லிருமென்று கேட்டால்-சுவாமி
என்குலத்தை நீர்பழிக்க யுமக்குவிளை யாட்டா
வையகத்துக் கேற்காது யென்னை-நீரும்
வஞ்சகம தாயிழந்து பேசுவது தன்னை
தெய்வானை யோசொல்லி விட்டாள்-எந்த
சிறுக்கியுமக் கிவ்வளவு சூதுசொல்லி தொட்டாள்

எப்படியோ நானறிய வில்லை-லோக
மெங்கும் நீர் போகாத விடமொன்று மில்லை
இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள் பேரு
வருந்திவிருந் தளித்தவளைச் சொல்லும்-அவளை
மயிர்பிடித்துக் கொண்டுவாரேன் சற்றேயிங்கே நி
மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு [ல்லும்
பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங் கேட்டா
முருக்குவளை தாதிகளே வாடி-நம்ம [ல்
முத்துலிங்க சுவாமியை நீ கூட்டிவா போடி
கருதுமருந் திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங் கந்தருக்கு கைபார்க்க வேணும்
மின்னுரே யென்றிவளுஞ் சொல்ல-யெங்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவரு மெள்ள
என்னடி வீண் யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டி லேயிருந் துண்ணதை நீ கண்டாய்
என்னுடைய சொல்உறுதி மீறி-நீயும்
எதிர்பேசி னதினாலே யுன்னை நான் சீறி
சொன்னவசை யல்லாது கண்ணே-சும்மா
தோகையே நானுமுனை பேசுவேனோ பெண்ணே
மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லா லிப்போதே
ஜெயமாக நான்போய் வருவேன்-வள்ளி
தினமுமுனைப் பிரியாமல் தரிசனமுந் தருவேன்
உந்தனைவிட் டகல்வேனோ மானே-யென்று
உபசாரஞ் செய்தங் கிருக்கையிலே தானே
கந்தனையும் கோவிலுக்குள் தேடி-அங்கே
காணுமல் தெய்வானை யம்மன் மனம்வாடி
மங்கையரே சுந்தரப் பிரகாசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போன முருகேசன்
எங்கேயென வேலவரைத் தேடி-நீங்க
ளிதுநிமிஷம் வரவேணு மென்றிடவே யோடி
தாதியர்க ளெல்லோருஞ் சென்று-யெங்கள்
சண்முக வேலாயுதனைத் தேடினு ரென்று
ஆதிசிவ மாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர் களோயிங்கே

பாதிபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணுமென்று தேடுவதி னாலே
கதித்த புகழ்கொண்ட முனிவோரே-யெங்கள்
கந்தனையுங் கண்டதுண்டோ சொல்லுவீர் நீரே
காணிக்கை கொண்டு வந்தோரே-எங்கள்
கட்டழகி தெய்வானை மணவாள னாரே
மாணிக்க கெங்கை நீராட-யிங்கு
வந்தவகை காணீர்களோ யினியெங்கே தேட
பாங்கியர் நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழி நாட
ஏங்கியிவர்கள் தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ் சிந்தையி லறிந்தன்பு கொண்டு
நினைவில் மறக்கா தெய்வானை-யிந்த
நிமிஷமே கூட்டிவா வென்றேவுஞ் சேனை
எனையழைக்க வேணுமென்று தேடி-வாரூர்
ஏந்திழையே நான்போய் வரவும் விடைதாடி
தாடியென்று சொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமே நகைத்து
தேடிவந்த பேர்களை நானடிப்பேன்-அந்த
தெய்வானை வந்தாலுமே சண்டை பிடிப்பேன்
என்னுடைய கணவனையுந் தேட-அவளுக்
கென்னவதிகாரம் விடை கேழ்க்குறீ ரோட
மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில் நின்றே
எனக்குரிய மானே நீகோபம்-இப்போ
யென்பேரில் வைக்காதே வீண் மனஸ்தாபம்
உனக்குநான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப் பேனோ
போய்வாரேன் வள்ளி தயவாக-யெனக்கு
புகழ்ந்து விடைதாடி தெய்வானை யிடமேக
வாய்திறந்து சொல்லுமன மகிழ்ந்து-யென்று
வடிவேலர் கேழ்க்கவே வள்ளியு முகந்து
மறைபுகழு கின்றவடி வேலா-சுவாமி
மனவருத்த மில்லாமல் போய்வாருஞ் சீலா
இறையவருக் குகந்தமக னாரே-யென்று
யிவள் சொல்ல வேலர்வழி கூடி நடந்தாரே

சித்திர வடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டடி பணிந்தார்
வெற்றிமயி லோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய் வானையையுங் கண்டெதிரே சென்று
மங்கையரே யெனைத் தேடுவானேன்-நம்ம [னேன்
வள்ளியம்மை தன்னுடைய கோவிலுச்குப் போ
செங்கமல மாதேஎன் கண்ணே-யிப்போ [ணே
தேடினது மென்னவகை சொல்லாயோ பெண்
தெய்வானை யென்ருர் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடி பணிந்து
வைபோக மான வடிவேலே-உடைய
மணவாளா உமக்குநித மிதுதானோ வேலே
இளையாள் மேலிருக்கிற பாசஞ் சுவாடி
யென்பேரி லேனில்லை யுமக்கு விசுவாசம்
அழையாத விருந்தோ நீர்காணும்-வள்ளி
யவள்மனைக்கு நிதம்வலியப் போகவோ வேணும்
முழுக்கவே யும்பாலே யேச்சே-சாதி
முறைதவறுக் குறவரிட சம்பந்த மாச்சே
இழுக்கான சாதியிலே லேகி-மாலே
யிட்டாலு மேன்மையது தருவாரோ யோகி
அடிக்கடி நீ ரவள்மனைக்குப் போனல்-மெத்த
வளக்களிப் பாகவே சொல்லுவா ளானல்
குடிதனி லுயர்ந்தவளு மில்லை-வள்ளி
குறவர்குல மானதால் சொன்னேனென் சொல்லை
நிசமென்று நீரெண்ணு வீரே-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமத வீரே
அசையாம லானந்த மீறி-வள்ளி
ஆசைகொண்டு பேசுகிறீர் நானுமக் குப்பாரி
யாகிநா னெடுத்ததென்ன கோட்டை-புவியில்
அறியாரே நீரெனக்குத் தேடிவருந் தேட்டை
தேகியென வாண்டிபோ லானீர்-சுவாமி
தேவியவள் வள்ளிதினை மாவுதிண்ணப் போனீர்
திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
சித்தமது யெப்படியோ கதிரைவடி வேலா
அரி மருகரே யென்றுரைக்க-யெங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானை மெய்க்க

மானேநான் உள்வருதிபெற்றேன்-பின்பு [ன்
வள்ளிதன்னை மாலையிட்டு கூட்டிவந்து வைத்தே
தேனே யென்மேற் பிழைகளில்லை-உனக்கு
தெரியாதோ வீணுகப் பேசுவது தொல்லை
கோவிலுக்கு நீபோடி யென்று-யெங்கள்
குமரேசன் சிம்மா சனத்திலே யேறி
சேவலொரு கையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடி வேலவரு மேகொலு விருக்க
சூடதீபா ராதனைக்கு-வந்து
சூழ்ந்தார்கள் கோடானு கோடி யன்றைக்கு
அடியவர் பணிந்து தூதிபாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலை சூட
சிம்மா தனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயவென வந்தார்கள் சூழவே பெருக்க
அம்மா பரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புட னருளுவா ராறு முகவேலன்
துன்பவினை யணுகாமல் தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லார்க்குந் தானே
தென்கதிரை வேலரு ளாகவந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக
சித்தர்களும் வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ் தனக் குதவி செய்சுப்பிரமணிய
கர்த்தனரு ளாலே குறைவில்லை-ஆருங்
கதிர்காம மென்றாலும் வறுமைகளு மில்லை
தேவர்களும் முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனரனு மூமையாளும் வாழி
நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியிது என்னாளும் வாழி
புள்ளிமயில் வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவே வாழி
வள்ளிதெய் வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச றென்னாளும் வாழி.

கதிரேசன் ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.

உ

சிவமயம்

கதிர்காமத்து ஏசல்

சீர்வளருங்கதிரை நாதன்மேற்சிந்துபாடச்
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே

சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னைமறவேனே-கந்த
வேலெனுமெங்கள்முரு கோனே

கோனெனுமிந்திர னுந் தேவருந்துதிசெய்யுங்
குப்பன் குருவைப்பணிந் தேத்த-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த

இன்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர் காமமதைப்பாரும்

தென்கதிர் காமமென்றால் யெங்கும்பிரகாசமாகச்
சேவல்கொடி துலங்கு தேதையா-இந்த
மாவளமாநகரின் மீதையா

மாவளமானயிந்தப் பூநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகேசன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
அந்தமதகரிமேல் பாரையா-மேவி
யந்தபவனிவருகிற தாரையா

அந்தபவனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வாரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி

சேனாதிபதியிவ ரானையின் மேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை

அருமையீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளை யெங்கள்பரமேஸ்வரி-கயிலை
காத்தாளே மங்கைமங்களேஸ்வரி

காத்தாளே செங்கைவேல னாத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க் கிவளாரு-யெனக்கு
ஒயிலாக சொல்லுமதுசீரு

ஒயிலாகயீஸ்வரியும் கயிலாசநாதருக்கு
உத்தமி சொந்தமனை யாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி

சத்திசிவனையவர் பெற்றிடும் ரதிமதன்
தான்வந்தெதிர்த்தென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னை யெரித்தாரையா

ஏனெரித்தாரென்றாயே மானேயுடையவர்மேல்
யேதுக்குப்பாணமதனெய்தான்-சிவன்
வாதுக்கனலாகவேதான் செய்தான்

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிஜயன்வில்லை
வாங்கிச்சிவனையடித்தே வைதான்-சிவன்
தாங்கி அருளவர்க்கு யேன்செய்தான்

தாங்கினதுகவத்தா லோங்கியபார்த்தனெனும்
தானேபொறுத்தாரருள் சிந்தையார்-இந்த
ஆனைமேல்வருகிற கந்தன் தந்தையார்

ஆனைமுகமும்பெரும் பானைவயிறிலங்க
அத்தாயிருக்கிறாரே பாரையா-ஒரு
தத்தமிலங்கியவ ராரையா

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்கத்
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமரன் தமையோன்கண்ணே

இனியகுமரனையுங் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ-தந்தி
வேஷமெடுக்கவிதிதானோ

வேஷமெடுக்கக்கண் டேசியவள்ளியஞ்சி
வேலனென் னுங்கந்தனைக் கொண்டாடினாள்-ஒரு
தாழ்வன்றிமாலையிடக் கூடினாள்.

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல் செஞ்சிநேரே-குற
மங்கையைக்கூடிக் கொஞ்சினாரே

மங்கைகுறவரிட சங்கையல்லடிபெண்ணே
வந்தபகவான்முனி வேண்டி-ஆதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி

சொந்தாய்வேலனுக்கு மிருந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லையோ மணமாலை-திருப்
பூட்டவில்லையோ புவிமேலே

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமனன் தங்கையருள்பாலன்

வாமனனேமம்செய்து நேமமாய் மாலையிட்டு
வந்தவர் வட்டக்குடைமின்ன-யிந்த
நந்திமேலேறி வாரதென்ன

நந்திமேலேறிவார திந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே

இங்கேவளமையென்றா லெங்கும்பகலைப்போல
யிருபுறமும்சனங்களேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கற்பூரதீபமதைத் தூண்டி-வாரார்
சுப்பிரமணியனுக்கே தாண்டி

தாண்டியுபசரித்து வேண்டிய தர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா

சித்திரமானவன்ன சத்திரங் கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றி பாரடி

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றாலவர் யாரு-அவர்
புகழ்பெற்றிருப்ப தெந்தவூரு

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்று ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டையாரடி

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா

தானையாவென்றுசொன்னமானே கொழும்பினிலே
சந்தோஷமாகவேவியா பாரமும்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும்

என்னேரமுங்கொழும்பில் சொர்னவியாபாரஞ்செய்தால்
இந்தக்கதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்கள்தோறும் வெகுசீரடி

வருஷங்கள்தோறுமிங்கே வருவாரானாலுஞ்சொந்த
மானகர்க்கேகினாலப்போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண்

ஆருகாணென்றாய்புக ழோரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத்தார்கள்-வெகு
சேகரமாகவருவார்கள்

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிருந்தவரோ தானும்-நல்ல
கல்விமிகுந்தவரோ காணும்

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாநாட்டுக்கோட்டை யாருக்கே

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டும்புகழ்படைத்த
நகரத்தாரென்றிவனைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா

சகலவியாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமற்செய்துவந்த ததினால்-புவியி
லிவரேநகரத்தாரென் றோதினார்

இவர்களைப்போலனேகர் யெவ்வளவோதர்மஞ்செய்தார்
யேனையோகாணுமந்த நாளில்லை-அப்போ
தானவர்க்கந்தபே ரேனில்லை
பேர்புகழ்சரியைகிரியை நேருங்குகனருளும்
பெற்றதினுல் நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத் தாரே
எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா-பொன்னுல்
சிறக்கவலங்கரித்த தாரையா
ஆறென்ருய்பெண்ணேயெங்கும் பேரானதென்மதுரை
ஆலயத்தைப் புதிப்பித்ததாரடி-வடி
வேலனருள் நகரத்தாரடி
வேலனைப்பெற்றசத்தி வாலைச்சிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனுர்-சடை
யாவும்புதிப்பிக்கிற தாரையா
புதிப்பிக்கவேணுமென்றுமதிப்பித்து உகந்துசெய்தார்
புவியிற்புகழ்நகரத் தாரடி-மூகில்கள்
குவியும்தன்மைபோல் கொடையாளரடி
கொடையர்கள் தர்மஞ்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயற்சியுள்ள வாழ்விலோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர்
நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம்நிலை நாட்டினுர்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினுர்
சூட்டியவர்கருளைத் திட்டியவேலவர்மேற்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஓகோ
மன்னவருமக்கெந்த தேசம்
தேசமென்பதுராசன் சேதுபந்தனஞ்செய்ந
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி
நானடிக்கடி கந்தநாதன் தன்னைப்பணிய
நல்லதினங்களெப்ப காணும்-அதைச்
சொல்லநாமிங்கேவர வேணும்

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்குத் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி
பாதகந்தன்னைப் பரிகாரமேசெய்யுங்கந்தன்
பாதகந்தனைப்பணிய வேணும்
காதல்கொண்டேவருவோம் காணும்
காணுந்தவமிகுந்து கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி
வாகன்செந்தூராளென்ருல் வையாபுரிப்பழனி
மாமலைபே லிருப்பதாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு
சாமிமலைமுதலாய் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி
ஆண்டிக்கிவ்வுலகெல்லாம் வேண்டியபதியென்ருல்
அத்தலங்களிலெது காணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங் கோனும்
சித்தம்வைத்திருப்பது மூத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவாள்கதிரை நாட்டார்
நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருத்திட்டால்
நாட்டுப்பதிகளில்செல் வாரோ-நாமும்
கேட்டவரங்கள்தரு வாரோ
கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தரு மருமகனுர்க்கேயெண்ணி
வாசமாய் நம்பிவந்தோர்க்கே
வாசமுடனே கதிரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழ் வாழி-யினி
கூறும்ஜெயமங்களம் வாழி
வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள் வாழியெங்கள்
மேழிக்கொடிக்குலமும் வாழி.

கதிர்காமத்து ஏசல் முற்றிற்று.

உ

சிவமயம்

கதிர்காமக் கும்மி

——[]——

சீர்வளமபெற்ற குயில்கூவும்நல்ல
தென்கதிர்காம மதில்மேவும்

ஆறுமுகன்கதி ரேசனின்மேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனின்மேல்

மங்களஞ்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட

சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே

சுந்தர நீறணி ஆறுமுகன்மீ திற்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்

சிந்தைக்கிசைந்தவேளை வாழ்த்திக்கவி
செப்பும் புலவர்களைப் போற்றி

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையு மேசிறக்க

வந்துதவிசெய்ய வேணுமம்மா நானும்
வாழ்த்துக்கவிமாலைபூணுமம்மா

கந்தன்கதிர்காம வேலனேபுவி
காக்குமறைபுகழ் லோலனே

யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியவும் சீலனே

மங்கையரெல்லோரும் வாருங்கடி யிந்த
மாணிக்கக்கெங்கை நீராடுங்கடி

சிங்காரமாய்ப்பணி பூட்டுங்கடி
சிறந்தகுங்குமந் தீட்டுங்கடி

கூந்தலுக்கேமலர் மாலைகட்டி நல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி

சேர்த்திணையாகவே பாடுங்கடி கந்தன்
சேவடி போற்றிக் கொண்டாடுங்கடி

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த

செய்யிழைமார்களே வாருங்கடி கவி
சிறப்பைச்சொல்லுகிறேன் கேளுங்கடி

ஓதியசெந்தமிழ் பாடிடவேயிந்த
ஊர்வளஞ்சொல்விக் கொண்டாடிடவே

ஏதுபிழைகளிருந்தாலும் சுவாமி
ஏழைக்கிரங்கி யெனையாளும்

ஆறுமுகனென்று பேருடையானெனை
யாளும்கதிர்காம வூருடையான்

சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான்

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையமுக்கண் சிவன்தானே

எத்திசையும்புகழ் மால்மருகன்றன்னை
ஏத்திக்கொண்டாடலாம் வாருங்கடி

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ் சந்தோஷத்திலே

ஆசைமிகந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவலெங்கும் தூத்தினர்

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்

கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காருகளெல்லாம் வளந்தோணும்

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பெலாவுந் தொடர்ந்திருக்கும்

கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும்

கானகத்தில்மயில் ரொம்பவடி புலி
கரடிமான்மரை கும்பலடி

வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும்

மாணிக்கக்கெங்கையா ரோடுவதும் நித்தம்
மாதவர்வந்துநீ ராடுவதும்

காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே

வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி

சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவரமும்

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
கொட்டியமேள முழக்குதுபார்

அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய்வானைக்கு மாடமும்

என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தின்

சன்னதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகளாவதும் சிங்களவர்

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
நாட்டியக்காரரும் சிங்களவர்

மன்னரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள்

புத்தமதத்திலுகந்தவர்கள் கந்தன்
பூசையில்நித்த மிருந்தவர்கள்

நித்தமும்சிங்களவர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும்

தெய்வானைக்கேற்ற மலர்கள்கொய்வார்பர
தேசச்சன்னியாசியின் பூசைசெய்வார்

வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி

எண்டிசைதோறும் புகழ்வாசன்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்

கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி-அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி

சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி

சிறப்பைச்சொன்னவ ரேகாணும் அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்

யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிப்போனல் தடந்தோணும்

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்தக்
கார்க்கடல்மத்தியில் தீவுமிங்கே

உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா

சொல்லுகிறேன்கேளடி மின்னுளேதேவர்
சொன்னசபதத்தால் முன்னுலே

வெல்லவேமாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு

உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்

எழுசுற்றுக்கோட்டை யாக்கியேயிதற்
கிலங்கையென்னும்பேர் தாக்கியே

ஆளுமென்றுபண நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே

ராணுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
ராவணன் றென்னிலங்கையாண்டான்

போனதிரேதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே

கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்

நின்றுகடலைக்கண்டே திகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான்

சீதையினாலே மனமோர்ந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்து

ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரியெல்லை கண்டுறுதி

பரப்பிலேபத்து யோசனையாய்க்கவிப்
படைமலைகொண்ட தற்கிணையாய்

உரத்துயோசனை நூறுமட்டும்அணை
உண்டுபண்ணியிலங்கைக் கோட்டைமட்டும்

நடந்துயிலங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு

அடர்ந்தராட்சதக் கும்பழியத்திரு
வணைசிதறுண்டு தான்மறைய

பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேராக்கி

அன்னுள் விபீஷண னுண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார்

நாட்டமூள்ளசயற் கண்ணுளேலங்கை
நகரம்நான்சென்று பின்னுலே

கோட்டையழிந்து கடலாச்சுயிது
கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
ஆளவொருவரு மில்லாமல்

ஒப்பாதகாடு மலையாச்சுபெரி
யோர்களுலாவு மிடமாச்சு

நயமிகுந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு

இயக்கரென்றொரு ராட்சதனுமயிதில்
யிருந்தரசிட்டான் யேச்சவனும்

நத்தியேநாயர் சிலகாலமேல்
நாட்டையாண்டு வருங்காலம்

புத்தரும்வந்திதில் நாடினுர்சிலர்
புத்தமதத்தைக் கொண்டாடினுர்

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகு பெற்றனுயாதி

விஜயராஜனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி

தலைமன்னுரென்று பேட்டைகட்டிராசன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி

சிலைவலியைக் கொண்டாடக்கண்டு
தென்ன-னியக்கர்கள் கூட

செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்

அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள்வெகு பேர்களடி

வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்யிந்து
மதசமயத்து வல்லாளர்

யிங்கேவந்துகுடி யேறினுர்யிதற்
கிசைந்தரசரு மீறினுர்

சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமயமு முண்டாச்சு

மங்கையரேசில ராஜாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க

பாண்டிசேரசோழத் தீரர்களும் வந்து
பட்டமாண்டமா வீரர்களும்

வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யச்சண்டை யிட்டுக்கொண்டார்

பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு

மேவும்சிவஸ்தல மெத்தவுண்டு அந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு

உன்னிதமான மலையுமுண்டுயிதி
    லோங்கும்சிவனடி பாதமுண்டு

முன்னீஸ்பரம்வெகு முக்கியமாம் அதில்
    மூலகணேசன் சிலாக்கியமாம்

கேட்டவர்க்கேயனு கூலமாம்திருக்
    கேஸ்புரமென்றொரு தானமாம்

நாட்டமுள்ள நகு லேஸ்புரமாம்சிவ
    நாதர்க்குகந்தகோ ணேஸ்புரமாம்

தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
    சாத்தாக்கோவிலொரு பகுதியாம்

எண்டிசைமெய்த்த குமாரபுரம்புக
    ழிலங்கும்சந்திரசே கரபுரம்

கண்டவர்மெய்த்த மாவிட்டபுரமான
    கர்த்தரால்செய்த தனேகபுரம்

தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்பின்னம்
    கோணதிருப்ப தனேகமதாம்

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமுன்னே
    ராமநாதனு லமைந்ததடி

பூமிக்குரித்தான மன்னர்மெத்தப்பட்டம்
    பூண்டரசிட்ட நகரமெத்த

கண்டியென்றும் கோட்டைக் காடிதென்று நல்ல
    கழனிநீர்கொழும் பூரிதென்றும்

அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
    அனுராசபுர பட்டணமாம்

முத்துச்சாலவத் துறையுமுண்டுகடல்
    மூழ்கிச்சங்கு குளிப்பதுண்டு

இரத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
    ரத்தினமணிகள் விளைவதுண்டு

பன்னகாமமதும் பறைநாடாம்யாழ்ப்
    பாணப்பகுதி வெகுநாடாம்

இன்னமிருக்கு தனேகமில்லையிப்ப
    எனக்குச்சொல்லச் சமயமில்லை

கண்டவிடமெல்லா மூராச்சுகோவில்
    கட்டியகட்டடம் பேராச்சு

திண்டுமுண்டாப்பழி கொண்டார்கள் நல்ல
    சிங்களரோடர சாண்டார்கள்

கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
    கட்சிவிக்ரம ராஜசிங்கன்

தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
    தலைமுறைவரை ராஜர்களும்

தொண்ணூற்றாறுமுடி மன்னரடி அதைச்
    சொல்லுஞ்சரித்திர மின்னமடி

விண்ணவர்கள்மெய்த்திடு மாநகரில்யிதில்
    மேவியரசிட்ட பேரவரில்

கண்டியரசனும் பின்னாலே அவன்
    கட்டடப்காணலாம் கண்ணாலே

வண்டனதியாய்க் காரடிஅவன்
    வம்மிஷம்நாயக்க ராஜனடி

அதற்குமுந்திய ராஜர்தொடுக்கட்டி
    ஆண்டவிடமெல்லாம் சீறுகெட்டு

மதிப்பதாக்கிடந் தோணுமலைக்காடு
    மண்டியிருப்பதுந் தானுமே

இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
    இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்

சங்கையுடனர சாளையிலேசீமை
    தன்னிருந்தந்த வேளையிலே

சிங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
    தீவுக்குள்ளேவந்து யிறங்கியே

தங்கச்சிகரம் தனைவகுத்துப்புத்தர்
    தாவுங்கழனித் திசையடுத்து

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
    கொழும்பென்றுசொல்லி பேர்நாட்டி

வெட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டி நல்ல
    விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி

தொட்ட திருக்கோணை மாமலையும் அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஓட்டாமல்தள்ளி விரைவாகிவந்து
உலர்ந்தாக்கார ருசாராக
ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த
கும்பமுனியார்வந்து ஓட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புக்கோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெட்டலுற்றார்கோடு
வங்காளக்கச்சேரி கட்டலுற்றார்
கண்டியரசனைத் தறித்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டு யறுத்திட்டார்
வண்டிக்குரோட்டுக ளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி
துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களையெல்லாம் சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்வசி
நிறைந்ததீர்வைப் பணங்களும்
மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேயிந்த
இங்கிலீஷ்காரர் தன்னரசை
பூட்டிரயிலையும் நடத்தினார்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினார்
தாஷ்டீகமான கடலலைக்குயூட
தடுத்தணைகட்டி யேநெருக்கி
தண்டவாளசூட்சம் வைத்தாரேமலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
கங்கையும்சிங்கார மூண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியுமவித்தையு மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன்றுமில்லையே தோழிப்பெண்ணே
தாழ்வில்லாத்தன்மை யுடன்வாழும்கவி
சாற்றியமன்னவரே கேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா
ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டுமின் னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணாரேவர்ண
கோலவிழிக்கயல் கண்ணாரே
அண்டமெல்லாமொரு தசட்டிலேகட்டி
ஆண்டகிரேதா யுகத்திலே
கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே
பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாபமிகப் பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட
வாசமுள்ள சுரநாளையிலே அவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசரைவீடு மிதில்தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்தாண்டி
குன்றெனும்சூரரைத் தூக்கினார்தேவர்
கோனுக்கரசை யுண்டாக்கினார்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும்விசு வாசமடி
காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமனென்றபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தநம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியேவேலவரை வாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற
விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்,தவண்டை முரசினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி
மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்ஸ்தலமண்டபந் தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிவிட்ட
திறைமறைப்பிங்கே யேதுக்கையா
திறைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
முன்மணிவாசலுந் தோணுது
முன்மணிவாசல் கீடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன் தன்னை
நானறியவகை சொல்லுமையா
நானுமறிந்தது மில்லையடிசொன்னால்
நம்புவையோ யெந்தன்சொல்லையடி
தேனிந்தவழி தோணட்டால்கந்தன்
சேருவைகாண முடியாது
சேருவைகாண முடியாவிட்டால்யிந்தச்
சிங்களவரென்னும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள்
ஆருக்கென்றால்வர்னப் பேளையொன்று அதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேட்க யீதேற்றிவீதி
பவனிவருவாது முண்டுமடி

பவனிவந்திடும் வேளையதுயென்ன
பாழ்வினையாகவே சமைந்தது
அவனியெலாம்புகழ்ந் தேற்றவேளைக்
கருள்நிறைந்தது மெய்விதங்காண்
அருள்நிறைந்து சமைந்தவித்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறியறிந்து துலக்காவிட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே
வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கையா
செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி
செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா
அறிந்ததுண்டைய னுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதர மாத்தினவர்
உரியசுத்த மவுனங்கொண்டுசமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு
கோடிபேருண்டென்றும் சொன்னவரேகந்தன்
கொலுவில்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண்
சேகரமான மலைகளுண்டுசுற்றி
திரண்டுருண்ட வளங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி

போனவரந்த மலைவளத்தைச்சொல்லிப்
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனாலவரெப்படிப் போனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண்
ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவினால்தாண்டி
யேகினாலந்தக் கதிர்மலைக்குவழி
யிசையத்தோணு மிருள்விலக்கி
இசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ் சாரமென்றீர்
திசைக்குச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ
விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
வேலனுத்தர வானவர்க்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம்
நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது யெந்தவலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டுஅப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணுது தோழிப்பெண்ணே
தோணுதென்றது மெய்யவரும்யிருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணாதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ
கண்டுதொழுவ தெல்லாமலையும்எங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்கண்ட பேருமில்லை
அங்கே துடிவயிரவன்காவலடி

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவுஞ்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை
சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரிதாதீதத் துறைகடந்த
நல்முத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராஜரால்கட்டிய கோவிலடி
கட்டியகோவில் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமிங்கேது சொல்லுமையா
முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமான முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி
தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்று அன்னச்
சத்திரம்கட்டின தார்காணும்
கட்டியமாமடம் செட்டியடிதர்மம்
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுயர்ந்ததர்மம் மடம்சமைத்தார்
உயர்ந்ததர்மம் மிகுந்தோர்கள்செல்வ
மோங்கும் வைகியகுலத்தார்கள்
இசைந்துவந்தவரைத் தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி
நாடியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு

வாரதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்

ஆறுமுகன்கதி ரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ

முக்கியமாய்க்கதிர் காமத்திலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே

சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமித்திருவிழாக் கூட்டமடி

கூட்டமும்பாட்டமும் கொண்டாடிக்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்

நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன

வளமைவேழத்தின் மேல்மிகுந்தகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து

கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி

கந்தனுக்கொத்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வருநாளில்

செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேர்மேலேறுவ தென்றைக்கையா

தேருமேலேறும் வளமையில்லைசித்திர
தேருமிழுப்பது மங்கேயில்லை

நேருடன்தண்டிகை மீதேறிசுவாமி
நீரறுப்பானதைப் பாருங்கடி

நீரறுப்பென்றதும் தோன்றலையேயிப்போ
நீர்சொன்னபாஷை விளங்கலையே

தேருமின்னாட்டு வளமைகளோயிதைச்
சீருடனேசொல்ல வேணுமையா

சீருள்ளமாணிக்கக் கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே

நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
நீரறுப்பென்பதும் மெய்தாண்டி

மெய்யான ஆறு முகவரெனும்சுவாமி
மேவிவள்ளி தெய்வானையெனும்

தையலர்மேவும் கதிர்காமம்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ

முத்தியுண்டங்கு நினைத்தாலுத்தவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்

சித்தியுமுத்தியு முண்டாகும்பிணி
சேராதருள்வார் முருகேசன்

கேசவன் தன்மரு மைக்குரிய வள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய

வாசமிருந்த தமிழதனைச்சொன்ன
மன்னவரேயுமக் கெந்தவூரு

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மாநகராம்திருப் புல்லாணி

நன்னயமாகிய ஊர்தாண்டிதங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி

பேரையுமூரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்து

தாருலவுங்கதிர் காமத்துக்கே நீரும்
தானிங்கேவந்த வயணமென்ன

வந்துகொழும்ப தனிற்சிறந்துவெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து

கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி

கைதொழுதேத்திய மெய்வாசன் நம்ம
கந்தன்கதிரை முருகேசன்

தெய்வானைவள்ளி மணாளனின்மேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா

சொல்லச்செவியுற்றுக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்றுமிப் பாட்டவர்க்கும்

தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தால்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால்

அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
யம்மைதெய்வானை கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம்
தீராதநோய்களைத் தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்துநம்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனவன்ஜெக
நாதன்செந்தூர் முருகனிவன்
தேவசேனாதி பதிதாண்டிகூவும்
சித்திரசேவல் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
முழங்கக்கும்மி யடியுங்கடி
சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
இம்மானிலத்தவரேற்றியே அவ
ரெண்ணிவந்தபடி தோற்றியே
செலுத்தும் வேடிக்கை பாருங்கடி கந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
நலத்தில்மூக்கியம் மெத்தவடிகந்த
சாமிக்குசிங்காரம் நித்தமடி
முப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்திரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும்
சிங்காரக்கும்மி தமிழ்ச்சிறக்கும்நமது
செங்கைவேலன்கதி ரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி
சித்திரவேலாயுதம் வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னிதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம்.

கதிர்காமக்கும்மி முற்றிற்று.

உ
சிவமயம்

மங்களம்.

——(*)——

ஆதிபரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழி முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க் கவியாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்

மங்களம் முற்றிற்று.

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.

புத்தக விளம்பரம்

	ரூ	ச.
ஸ்ரீமஹாபாரதம், 4 வால்லியம், படங்களுடன் ...	35	00
ஸ்ரீமஹா கந்தப்புராணம் ,, ...	15	00
ஸ்ரீமத் கம்பராமாயணம் ,, ...	5	00
ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் ,, ...	5	00
ஆதிபர்வம் ... ,, ...	5	00
விராடபர்வம் ... ,, ...	4	00
விக்கிரமாதித்தன் கதை ... ,, ...	5	00
பஞ்சபாண்டவர் வனவாசம் ... ,, ...	2	00
தருமர் அஸ்வமேதயாகம் ... ,, ...	2	00
அபிமன்னன் சுந்தரி மாலை ... ,, ...	1	75
புலந்திரன் தூது ... ... ,, ...	1	75
புவனேந்திரன் அம்மானை ... ,, ...	1	75
வைகுந்த அம்மானை ... ,, ...	1	75
அல்லி அரசாணி மாலை ... ,, ...	1	75
மதனகாமராஜன் கதை ... ,, ...	2	00
கிருஷ்ணன தூது .... ,, ...	1	25
நளச்சக்கரவர்த்தி கதை .... ,, ...	1	00
கோவிலன் கதை ... ... ,, ...	1	00
சித்திராபுத்திரன் கதை .... ,, ...	1	00
கருடபுராணம் ... . ,, ...	1	00
மயில்ராவணன் கதை .... ,, ...	1	00
சிறுத்தொண்டன் கதை .... ,, ...	—	75
புரூரவச்சக்கரவர்த்தி கதை ... ,, ...	—	75
கர்ணமகாராஜன் சண்டை ... ,, ...	—	75
தேசிங்குராஜன் கதை ... ,, ...	—	75
மதுரைவீரன் கதை ... ,, ...	—	75
துரோபதை குறம் ... . ,, ...	—	75
நல்லதங்காள் ... . ,, ...	—	75

விலாசம் :—

சரஸ்வதி புத்தகசாலை,
175, செட்டியார் தெரு, கொழும்பு.

495-25

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு கொழும்பு

1 புராண இதிகாசங்கள்

	ரூ	அ
ஸ்ரீ மஹாபாரதம் 4 வால்யம் படங்களுடன்	30	0
ஸ்ரீ மஹா கந்தபுராணவசனம்	10	0
ஸ்ரீமத் கம்பராமாயணவசனம்	10	0
ஸ்ரீமத் பாகவதவசனம்	10	0
மூவர் அடங்கன் முறை	15	0
அருணசலபுராண உரை	5	0
விநாயகபுராணவசனம்	8	0
விநாயகர் தோத்திரக்கொத்து	1	8
பட்டினத்தார் பிரபந்த உரை	8	0
பட்டினத்தார் பாடல் உரை	4	0
ஷை மூலம்	0	6
தாயுமானவர் பாடல் மூலம்	1	8
ஷை கிளேஸ்	3	0
ஷை உரை	8	0
திருப்புகழ் 160 பாடல்	1	0
ஷை 200 பாடல்	1	8
சிவபராக்கிரமம்	4	0
சுப்பிரமணியபராக்கிரமம்	4	0
திருவாதவூரடிகள் புராணஉரை	4	0
விஷ்ணுபுராணவசனம்	8	0
ஸ்ரீ பகவத்கீதைவசனம்	5	0
திருவிளையாடற் புராணவசனம்	5	0
பெரிய புராணவசனம்	5	0
ஸ்ரீ மஹாபாரத ஆதிபர்வம்	5	0
,, விராடபர்வம்	3	0
நாலாயிரதிவ்ய பிரபந்தம்	12	0
ஷை திரட்டு	1	0
அபிராமி யந்தாதி	0	2
ஸ்தோத்ரத்திரட்டு	1	0
திருச்செந்தூர்பிள்ளைத்தமிழ்உரை	2	0
ஸ்ரீமத் கம்பராமாயண சுந்தரகாண்டம்வசனம்	2	0
ஸ்ரீமஹாபக்த விஜயம் 6பாகம்	15	0

2 கதை அம்மானை

விக்கிரமாதித்தன்கதை	5	0
பஞ்சபாண்டவர்வனவாசம்	2	0
தர்மர் அஸ்வமேதயாகம்	2	0
மதனகாமராசன்கதை	2	0

3189/4

	ரு	அ
வைகுந்த அம்மானை	1	12
புவனேக் கிரனம்மானை	1	12
புலந்திரன் தூது	1	12
காத்தவராயன்கதை	1	12
அபிமன்னன் சுந்தரிமாலை	1	12
நளச்சக்ரவர்த்திகதை	1	8
பவளக்கொடிமாலை	1	0
புலந்திரன்களவுமாலை	1	0
கிருஷ்ணன் தூது	1	0
கருடபுராணம்	1	0
ஆரவல்லி சூரவல்லி	1	0
தேசிங்குராசன்கதை	1	0
மயிலிராவணன்கதை	1	0
கான்சாகிபுசண்டை	1	0
கர்ணன்சண்டை	1	0
புரூரவச்சக்ரவர்த்திகதை	1	0
கோவிலன்கதை	1	0
சித்திரபுத்திரநயினார்கதை	1	0
மின்னொளியாள்குறம்	1	0
மதுரை வீரசுவாமிகதை	1	0
கதிரேசன் ஆனந்தகளிப்பு	0	12
சிறுத்தொண்டன்கதை	0	12
ஏணியேற்றம்	0	12
திரௌபதைகுறம்	0	12
தமிழறியும் பெருமாள்கதை	0	12
வாலிமோட்சம்	0	12
புஷ்பலீலாவதி கதை	1	8
பூலோகரம்பைகதை	1	12

3 சோதிடம்

சுகர்நாடிஎன்னும் சோதிடசிகாமணி	8	0
சப்தரிஷிவாக்கியம்	8	0
சாதகாலங்காரம்உரை	5	0
சோதிடக்களஞ்சியஉரை	5	0
குமாரசாமிய உரை	3	0
சோதிடச்சில்லறைக்கோர்வை	4	0
சங்கராசாரியார் ஆயுட்பாகம்	2	0
அகஸ்தியர் பஞ்சபக்ஷிஉரை	2	0

	ரு	அ
உரோமரிஷி வினாடிபஞ்சபக்ஷி	1	0
ஷை உரை	3	0
சந்திரகாவியஉரை	0	8
மழைக்குறிசாஸ்திரம்	0	10
கணேச ஆரூடதீபிகை	1	8
தொடுகுறிசாஸ்திரம்	0	3
கெவுளிசாஸ்திரம்	0	3
மரணகண்டி சோதிடம்	0	12
சகலகனவின் பலன்	0	4
சிற்பசிந்தாமணி பெரிது	5	0
சூடாமணி உள்ளமுடையான்	1	8
பாலகிரகதோஷம்	0	3
நவக்கிரக பூஜாவிதி	0	6
போகர்பஞ்சபக்ஷி	2	0
விமேசுரஉள்ள முடையான்உரை	1	8
வீமகவி உயையுடன்	1	8
தாண்டவமாலை உரையுடன்	0	12
தினசரிகோசரபோதினி	0	12
ஜாதகப்பலன் விளக்கம்	0	8
சோதிட ஆசிரியன் 4பாகம்	5	0
சோதிட வினாவிடை	4	8

4 வைத்தியம்

அநுபோகவைத்யம் 8காண்டம்	10	0
போகர் 7000	10	0
ஆத்மரக்ஷா மிர்தவைத்தியசாரசங்கிரகம்	5	0
வைத்திய மூலிகை அகராதி	2	0
18 சித்தர் நாடி சாஸ்திரம்	2	0
கண்ணுச்சாமியம் என்னும்வைத்தியசேகரம்	2	8
சிகிச்சாரத்னதீபம் முதற்பாகம்	7	0
ஷை 2ம்பாகம் வைத்திய சிந்தாமணி	5	0
கைமுறைபாக்கட் வைத்தியம்	1	8
ஷை செய்முறை	1	8
ஞானவெட்டி மூலம்	2	0
ஷை உரையுடன்	5	0
பதார்த்தகுண விளக்கம் 1ம்பாகம்	9	0
ஷை 2ம்பாகம்	6	0
மருத்துவசாஸ்திரம் படங்களுடன்	5	0

	ரு	அ
ஸ்திரீபால சிகிச்சை	5	0
இங்கிலீஷ் தமிழ் வைத்யசிகாமணி	5	0
விஷவைத்திய சிந்தாமணி	2	0
வைத்தியக்குறள்	1	8
பதார்த்தகுண சிந்தாமணி	3	0
பூனுனிபதார்த்தகுண விளக்கம்	3	0
18 சித்தர்வைத்திய சில்லறைக்கோவை	5	0
மர்ட்டு வைத்தியம் 3பாகம்	4	0
மாட்டு வாகடம்	1	8
மணிமந்திரவைத்திய சேகரம்	2	0
அகஸ்தி பாலவாகடத்திரட்டு	1	8
ஆயுள்வேதக் சுருக்கம்	1	0
மூலிகைமர்மம் 4பாகம்	5	0
ஹிந்துபாலவைத்திய போதினி	1	0

5 இன்பநூல்கள்

கொக்கோகலீலை	0	8
கொக்கோகபக்குவம்	1	4
கொக்கோக மர்மம்	1	8
கொக்கோக நுட்பம்	1	8
கொக்கோக சாரம்	1	8
முத்தத்தின் பக்குவம்	1	4
கொக்கோக வைபோகம்	1	4
கொக்கோக இன்பலீலை	2	0
பழையகொக்கோகம்	6	0

6 அகராதி நிகண்டு

சூடாமணி நிகண்டு 12 தொகுதி	5	0
மதுரைத்தமிழ்ப் பேரகராதி	20	0
ஜுபிலித்தமிழ் அகராதி	18	0
இங்கிலிஷ் இங்கிலிஷ் தமிழ் அகரர்தி பெரிது	15	0
ஷை சிறிது	5	0
வீரமாமுனிவர் சதுரகராதி	5	0
தற்காலத்தமிழ்ச் சொல்லகராதி	3	0
கழகத்தமிழ்க்கையகராதி	2	0

7 ஜாலம் மாந்திரீகம்

மாந்திரீக அரிச்சுவடி	0	5
மாந்திரீக ரத்னகரம்	2	0

	ரு	அ
கந்தானுபூதி சக்கரம்	0	8
சடாக்ஷரவிஞ்சை	0	6
வாராகிமாலை சக்கரத்துடன்	0	8
பாலகிரக தோஷம்	0	3
விசேர்த ஜாலக்கண்ணாடி	0	10
பீதாம்பரஐயர் ஜாலம்	3	0
கண்கட்டு வித்தைகள்	4	0
சத்துரு சங்காரம்	1	8

8 இஸ்லாம் மார்க்க புத்தகங்கள்

சீறாப்புராணம் கவி	6	0
இரவுஸ்கால்படைப்போர்	3	8
மஸ்தான்சாகிபு பாடல்மூலம்	2	0
ஷை உரையுடன்	6	0
ஐந்துபடைப்போர்	1	8
இரத்தின விலாசம்	1	8
சார்தர்வேஸ்கதை	1	8
இராஜமணிமாலை	1	8
முகிதீன்மாலை	1	0
இரத்தினமுகம்மது காரணசரித்ரம்	0	12
பப்பாத்தி அம்மானை	0	12
ஷம்மூன் கிஸ்ஸா	0	12
நசீஹத்துல் இஸ்லாம் ஷாபி	0	12
ஷை ஹனி	0	12
காசிம் திருப்புகழ்	0	12
ஹம்சாலெப்பை பதம்	1	8
சத்துருசங்காரம்	1	8
நபியவதார அம்மானை	0	4
தொழுகையடவு	0	4
சலவாத்துப்பாட்டு	0	4
பெண்புத்திமாலை	0	4
காசிம்படைப்போர்	0	4
சக்கராத்து நாமா	0	4
நசீது நாமா	0	4
தீதாறுமாலை	0	6
ஞானமணிமாலை	0	6
சைத்துன் கிஸ்ஸா	1	0
குறமாது	1	0

	ரூ	அ
மஹாிபத்து மாலை	1	0
மரணவிலக்கம்	0	6

9 இலேசாக ஆங்கிலம் கற்கும் நூல்கள்

ஆங்கில சுயபோதினி	1	0
ஆங்கில ஆசான்	5	0
இங்கிலீஷ் தமிழ் ஒக்கபிளேரி	0	4
இங்கிலீஷ் தமிழ் பிரைமர்	0	3

10 பாட்டுப்புஸ்தகங்கள்

நடராசபப்பத்து, கெருடப்பத்து, அருணாசலேசுரார்பதிகம், மாதப்பதிகம், சுப்பிரமணியர் விருத்தம், ஆறுமுகசாமிவிருத்தம், காமாட்சியம்மன், விருத்தம்- வடிவுடையம்மன் ஆசிரியவிருத்தம், வேமனானந்த சுவாமி பதிகம், இராமர்தோத்திரம், திருநாமப் பதிகம், சூரியநமஸ்காரப்பதிகம், மாரியம்மன் விருத்தம், குதம்பைச் சித்தர்பாடல், அழுகனிச்சித்தர்பாடல், தலைவிதிக்கீர்த்தனை முதலியன ஒன்று	0	1
20 சில்லரைக் கோர்வை	1	0
200 சில்லரைக் கோர்வை	5	0
ஞானக் கோர்வை	5	0

11 பலவிதபுஸ்தகங்கள்

விநோதரசமஞ்சரி கிளேஸ்	5	0
ஷை ரப்	3	0
தனிப்பாடற்றிரட்டு மூலம்	2	0
ஷை 2பாகம்	10	0
விவேகசிந்தாமணி உரை	0	6
நாலுபாஷை ஒக்கபிளேரி	0	12
நாரதர் கலகம் 4பாகம்	4	0
விடுகவிக்களஞ்சியம் பெரியது	0	8
ஷை சிறிது	0	2
கோலப்புஸ்தகம்	0	6

12 சினிமாப்பாட்டுகள்

அசோக் குமார் — ஜகதலப்பிரதாபன்
அம்பிகாபதி — கண்ணகி
ஆர்யமாலா — ஸ்ரீ வள்ளி
சகுந்தலா — திருநீலகண்டர்

ரூ அ

சாவித்திரி — மீரா
அரிச்சந்திரா — பிரபாவதி
சிந்தாமணி — பூம்பாவை
லவங்கி — ஹரிதாஸ்
டிங்கம்மாசபதம் — மைனர்ராஜாமணி
வனமோஹனி — ராஜேஸ்வரி

இன்னும் அநேக சினிமாப் பாட்டுப் புஸ்தகங்கள் உண்டு ஒன்றுக்கு விலை அணா2 16சினிமாப்புஸ்தகங்களடங்கிய, சினிமாகிதக் கோர்வை பாகம்ஒன்றுக்கு

விலை ரூபா 1=0=0

சிறந்த நூல்! குறைந்த விலை!!

ஆங்கிலதமிழ்சுயபோதினி

தமிழ் எழுதப்படிக்கத்தெரிந்தவர் அனைவரும் ஆசிரியர் உதவியன்றி தானாகவே ஆங்கிலம் கற்கக்கூடிய அருமையான புஸ்தகம்

நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பெற்றது 144-பக்கங்கள் கொண்டது சொற்பபிரதிகளே இருப்பதால் பின் இல்லையே என்று ஏமாறாமல்வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள்

விலை ரூபா ஒன்று

சென்னை பி. ஜி. பாடல் அன்ட் கம்பனியார் வெளியிட்ட

நமது தாய் மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், B. A. L. T.

(பல அழகிய படங்களுடன் நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பெற்றது)

		சதம்
முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	30
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	35
மூன்றாம் புத்தகம்	(மூன்றாம் வகுப்பு)	45
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	50
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60
கோபால் வாய்ப்பாடு	(ஐந்தாம் வகுப்பு)	15

இலங்கைக்கு சொல் ஏஜண்டுகள்:—

சிறந்த நூல்! குறைந்த விலை!!

சொற்ப பிரதிகளே இருப்பதால் பின் இல்லையே என்று
ஏமாறாமல் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள்

இன்ப வாழ்க்கையின்
மர்மங்கள்

அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் நல்ல கிளேஸ்
கடிதத்தில் பதிப்பிக்கப்பெற்றது
சுமார் 400 பக்கங்கள்கொண்டது விலை ரூபா நான்கு

வீரகேசரி ஆசிரியர்

திரு. H. நெல்லையா B. A. அவர்கள்

எழுதிய அரிய தமிழ் நாவல்களை நீங்கள்
இன்னும் வாசிக்கவில்லையா?
இன்றேல் இன்றே வாங்கி வாசித்து மகிழுங்கள்

பிரதாபன் (அல்லது)
மஹாராஷ்டிர நாட்டுமங்கை

340 பக்கங்கள் கொண்டது விலை ரூ 3

சந்திரவதனா (அல்லது)
காதலின் வெற்றி

இரண்டு பாகங்களும்
சுமார் 1000 பக்கங்கள் கொண்டது ரூ 6

இன்னும் பலவிதமான புஸ்தகங்கள் எப்போதும் விற்பனைக்குத்தயாராய் இருக்கின்றன

உள்ளூரவர்கள் நேரிலும் வெளியூரவர்கள் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

காகிதப் பஞ்சம் காரணமாக புஸ்தக விலைகள் கூடியிருப்பதோடு சில புஸ்தகங்கள் அச்சிடாமலும் இருக்கிறது காலக்கிரமத்தில் விலைகள் குறைவதோடு சகலபுஸ்தகங்களும் அச்சிட்டு விற்பனைக்குவந்துவிடும்

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு கொழும்பு

167

வி... தோத்திரகொத்து

1. விநாயகர் அகவல்
2. விநாயகர் கவசம்
3. விநாயகர் திருவிரட்டை மணிமாலை
4. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
5. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை
6. காசித்துண்டி விநாயகர் திருவருட்பா
7. வேழமுகம்
8. விநாயகர் திருவகவல்
9. சித்திவிநாயகர் பதிகம்
10. வல்லபை கணேசர்பிரசாதமாலை
11. கணேசத் திருவருண் மாலை
12. தனித்திருமாலை
13. விநாயகமூர்த்தி பதிகம்
14. விநாயகர் பிள்ளைத் தமிழ்
15. விநாயகர் தோத்திரத் திரட்டு
16. பிள்ளையார் கதை

முதலியன அடங்கியுள்ளன.

பல அழகிய படங்களுடன் நல்ல கிளேஸ் கடிதத்திற்பதிப்பித்து அழகிய கலிகோ பைண்ட் செய்யப்பெற்றது.

விலை ரூபா 1—0—0 சதம் 50.

விலாசம்:—

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு,
கொழும்பு.